# நல்லாட்சிக் கோட்பாடும் இலங்கையில் அதன் பிரயோகமும்: 2015இல் இருந்து 2018 வரை


**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையில் சமகால அரசியலில் அதிகம் உச்சரிக்கப்படுகின்ற ஒரு விடயமாக நல்லாட்சி என்னும் பதம் மாறியிருக்கின்றது. தேசிய அரசாங்கம் ஆட்சி புரிகின்ற இக்கால கட்டத்தில், நல்லாட்சி பற்றிய சிறந்த புரிதலைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். இதனடிப்படையில், நல்லாட்சி என்றால் என்ன? என்பதனைக் கோட்பாட்டு ரீதியில் விளங்கிக்கொள்வது அவசியமானதாகும். இக்கோட்பாட்டின் அடிப்படையில், நடைமுறையில் உள்ள அரசாங்கத்தினை நல்லாட்சி அரசாங்கமாக மதிப்பீடு செய்ய முடியுமா? என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு முறையியல் அணுகுமுறையினை அடிப்படையாகக் கொண்டது. இப்பண்புசார் தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. குறித்த தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வின் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவானது, நடைமுறையில் உள்ள தேசிய அரசாங்கத்தினை நல்லாட்சி அரசாங்கமாகக் குறிப்பிடுவது கேள்விக்குரியதாகும் என்பதனை வலியுறுத்துகின்றன. எவ்வாறாயினும், கடந்த கால ஆட்சியுடன் ஒப்பிடும் போது நல்லாட்சிப் பண்புகள் சில நடைமுறைப்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது மறுப்பதற்கில்லை. இதனடிப்படையில் இத்தேசிய அரசாங்கத்தினை நல்லாட்சி அரசாங்கம் என்பதனைவிட நல்லாட்சி நோக்கிப் பயணிக்க எத்தனிக்கின்ற அரசாங்கமென்று கூறுவதே பொருத்தமானதாகும் என்பது இவ்வாய்வின் முடிவாகும்.



**திறவுச்சொல்:** இலங்கை, நல்லாட்சி, தேசிய அரசாங்கம். உலகவங்கி, நல்லாட்சிப் பண்புகள்,

## 1.0 அறிமுகம்:

இலங்கையில் சமகால அரசியலின் ஒரு தொடக்கப் புள்ளியாக நல்லாட்சி என்பது பார்க்கப்படுகின்றது. நல்லாட்சி என்பதற்குக் குறிப்பான பொருள் கோடலொன்றை வழங்குவது சிரமாமானதாக அமைந்தாலும், தற்காலத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வரைவிலக்கணம் மக்களின் நம்பிக்கை, விருப்பு, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றினைப் பெற்றுக்கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற ஆட்சியை நல்லாட்சி எனலாம். மேலும், தேசம் ஒன்றை முகாமை செய்யும் நோக்கில் அரசியல் அதிகாரங்கள் பங்கிடப்பட்டு பிரயோகிக்கப்படுவதையும் நல்லாட்சி எனக் கூறலாம். மறுபுறம், நல்லாட்சி என்ற எண்ணக்கரு தனித்து அரசுக்கு மாத்திரம் உரித்தானதன்று. மாறாக, சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு விடயம் எனக்கூறமுடியும். இலங்கையில் 2015ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய அரசாங்கம் ஆட்சி புரிகின்ற கால கட்டத்தில், நல்லாட்சி பற்றிய சிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். இப்பின்னணியில், நல்லாட்சி பற்றிய கோட்பாட்டு விளக்கம் மற்றும் 2015ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் அதன் பிரயோகம் தொடர்பான மதிப்பீடாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இரண்டாம் குடியாசு யாப்பில், 19 ஆவது சீர்திருத்தத்தில் தேசிய அரசாங்கம் என்பது தொடர்பில் கூறப்பட்டுள்ளது. அதாவது, ''இரண்டு பிரதான கட்சிகள் சேர்ந்து அமைக்கின்ற அரசாங்கத்தையே தேசிய அரசாங்கம் என்பது குறிக்கும்'' இப்பொருள் விளக்கத்தின் அடிப்படையில், இவ்வாய்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் 2015 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குரிய காலப்பகுதி 2015 தொடக்கம் 2018 வரைக்குமான காலப்பகுதியாகும்.

## 1.1 ஆய்வுப் பிரச்சினை:

இவ்வாய்வின் பிரதான பிரச்சினை தேசிய அரசாங்கம் நல்லாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆட்சி புரிகின்றதா? என்பதைப் பகுப்பாய்வு செய்வதாகும்.

## 1.2 ஆய்வு வினாக்கள்:

இப்பிரதான ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில் பின்வரும் ஆய்வு வினாக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன: முன்னைய மஹிந்த இராஜபக்ச ஆட்சியினை

குறைகூறுவதற்காக அதிகாரத்தில் உள்ள அரசியல் வாதிகளினால் நல்லாட்சி என்பது பயன்படுத்தப்படுகின்றதா?

மற்றையது, சர்வதேச ரீதியாக இலங்கை மீது சுமத்தப்படுகின்ற யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, தந்திரோபாய ரீதியாக நல்லாட்சி என்பது திட்டமிட்டே பயன்படுத்தப்படுகின்றதா? என்பனவாகும்.

### 1.3 ஆய்வு முறையியல்:

மேற்குறிப்பிடப்பட்ட ஆய்வுப் பிரச்சினைக்கும், ஆய்வு வினாவிற்கும் விடைதேடும் வகையில் பண்புசார் ஆய்வு முறையியல் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இப்பண்புசார் தகவல்கள் இரண்டாம்நிலைத் தரவு மூலங்களாகிய நூல்கள், ஆய்வு அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத் தளங்கள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டுள்ளன.

## 2.0 நல்லாட்சிக் கோட்பாட்டு விளக்கம்:

1990 களின் ஆரம்பத்திலிருந்து நல்லாட்சி என்ற எண்ணக்கருவானது நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கும், வறுமையொழிப்புக்கும் அத்தியவசியமானது என்ற எண்ணப்பாங்கு முன்னிலைக்கு வந்ததோடு, அது மிகத் தீவிரமான வகையில் அரசுகளால் கவனத்தில் கொள்ளப்படத் தொடங்கின. பனிப்போர் காலத்தில் நன்கொடை வழங்குனர் நாடுகளுக்கும், பெறுநர் நாடுகளுக்குமிடையில் சிறப்பான உறவுகள் காணப்படாமையினால் இத்தகையதொரு சிந்தனை வேகமாகப் பரவியது. இதனால், நல்லாட்சி என்பது சர்வதேச நிகழ்ச்சி நிரலாக இணைத்துக் கொள்ளப்பட்டதோடு அபிவிருத்திக்கான நன்கொடை வழங்கும் நிறுவனங்களின் முன்நிபந்தனையாகவும் மாறியது.

நல்லாட்சியானது வெவ்வேறுபட்ட காலப் பகுதியில் ஆனால், தொடர்ந்தும் அரசுகளின் தவிர்க்க முடியாத நோக்கங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. அரசியல் தத்துவவாதிகள் பலரும் வித்தியாசமான நோக்கில் நல்லாட்சியை நோக்கியுள்ளனர். ஆனால், தற்போது இத்தோற்றப்பாடு மிகவும் கடினமான சூழ்நிலையில் தனியானதொரு விதத்தில் கையாளப்படுவதைனைக் காணலாம். இதனால் இதனை வரைவிலக்கணப்படுத்திக் கொள்வதில் கடினமான நிலையொன்று

காணப்படுகின்றது. ஆயினும், நல்லாட்சி என்ற எண்ணக்கருவானது மிகவும் பழமை வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது.

கௌடில்யர் நல்லாட்சி தொடர்பாக அர்த்த சாஸ்திரம் என்ற நூலில் குறிப்பிடுகையில், ஆட்சியாளன் தனது கடமைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஆட்சியாளன் வரம்புகளைக் கொண்டிருக்க வேண்டும்: மேலும், முறையான வழிகாட்டல் நிருவாகத்தினையும், விவசாய, போக்குவரத்து, விலங்கு வேளாண்மை போன்றவற்றின் விருத்திக்கு அரசு பொறுப்பானதாக இருத்தல் வேண்டும். பொதுச் சேவைக்கு நிலையான சம்பளம் வழங்க வேண்டும்: மேலும், சட்டத்தினையும், ஒழுங்கையும் பாதுகாத்தல் முடியின் பிரதான கடமையாகும். ஊழல் மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு எதிராக முறையான தண்டனைகளை மேற்கொள்ள வேண்டும்: இது தவிர மன்னன் மிகவும் ஒழுக்கமான வகையில் நடக்க வேண்டும். மக்களது பொருள்சார் நலன்கள் மட்டுமல்லாது ஒழுக்கம் சார் நலன்களும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்கிறார் (அலுத்பட்டபெந்திகே, 2000). கௌடில்யரின் இத்தகைய சிந்தனைகள் நல்லாட்சி தொடர்பான சமகால சிந்தனைகளுக்கு வழிகாட்டுவனவாகவுள்ளன.

நல்லாட்சிக்கான அடித்தளத்தினை கிரேக்க காலத்திலும் காணலாம். குறிப்பாக, பிளட்டோ, அரிஸ்டோட்லின் கருத்துக்களில் நல்லாட்சிக்கான அடித்தளத்தினைக் காணலாம். பிளட்டோ குடியரசு என்னும் நூலில் இலட்சிய அரசில் நல்லாட்சிக்கான கருத்துக்களினைக் காணலாம். திறமையாகப் பயிற்றப்பட்ட நிருவாக, அரசியல் வர்க்கத்தினாலேயே எவ்விதமான தனிப்பட்ட நலன், நிதி இலாபங்களின்றி வினைத்திறனாகச் செயற்பட முடியும். மேலும், அரசாங்கமானது ஒழுக்கத்தின் அடிப்படையில் மக்களை வழிநடாத்துவதற்கான உயர்ந்த ஒழுக்க ரீதியான கடமையைக் கொண்டதொரு ஸ்தாபனமாக பிளட்டோ நோக்குவதிலிருந்து நல்லாட்சிக்கான வித்து போடப்பட்டுள்ளது (Aliu Ylber, 2018). அரிஸ்டோட்டிலும் தனது அரசியல் என்ற நூலில் நல்லதொரு வாழ்க்கையை உருவாக்குவதற்காகவே அரசினது நோக்கம் இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றார் (Dumitrescu, 2010). இவ்விரு சித்தனையாளர்களது நோக்கம் மக்களிற்கு நல்வாழ்க்கையினை வழங்குவதாகும்.

நல்லாட்சி என்ற பதமானது ஆங்கில மொழியில் முதல்முதலாக 1628ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டுள்ளது (Maldonado, 2010). ஜோன் லொக், ஜீன் ஜக் ரூசோ மற்றும் ஜே. எஸ். மில் போன்றவர்களது சிந்தனைகளில் நல்லாட்சிக்கான கருத்துக்கள் காணப்படுகின்றன (புஞ்சிஹேவா, 2003). தற்காலத்தில் 1989 ஆம் ஆண்டு உலக வங்கி துணை சகாரா ஆபிரிக்க

நாடுகளுக்காக வெளியிட்ட ஆவணமொன்றில் நல்லாட்சி தொடர்பான விடயம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நல்லாட்சி என்ற எண்ணக்கருவானது உறுதியானதொரு அபிவிருத்தி முகாமைத்துவமாகவே இதில் கருதப்பட்டிருந்தது(The world Bank Group, 1999).

உலக வங்கியானது நல்லாட்சிக்கு அரசியல் நம்பகத் தன்மை, சங்கமாகக் கூடுவதற்கான உரிமை மற்றும் பங்கேற்றல், நிர்வாகத்தின் பொறுப்பேற்கும் தன்மை, உறுதியான நிருவாக முறைமை, அரசாங்கத்துக்கும் சிவில் சமூக நிறுவனங்களுக்குமிடையிலான ஒத்துழைப்பு போன்றன அத்தியவசியமானது என நம்புகின்றது (The world Bank Group, 1999). இவ்வகையில் நல்லாட்சி என்பது உண்மையில் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பங்குபற்றுதல் மற்றும் வெளிப்படையான வகையில் மக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துகின்றதொரு நிறுவன ரீதியான ஈடுபாடு எனக் கூறலாம்.

தோமஸ் ஜி வெயிஸ் (Thomas G Weiss) நல்லாட்சி தொடர்பில் குறிப்பிடுகையில் ‘‘எதாவது ஒரு சமூகத்தில் வாழும் ஒட்டுமொத்த மக்களின் நம்பிக்கை, விருப்பு, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டு முன்னெடுக்கப்படும் ஒரு ஆட்சியாக அமையும். இவ்வாட்சி ஒரு சமூகத்தால் அல்லது நாட்டால் அல்லது நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் எனக்கூறியுள்ளார் (Weiss. G. Thomas, 2000). மேற்குறிப்பிடப்பட்ட வகையில் நல்லாட்சி தொடர்பான கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதன் மூலம், நல்லாட்சிதான் சிறப்பான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான நிரந்தரமான சூழலை உருவாக்கும் என உலக வங்கி கருதியதோடு, உறுதியான பொருளாதாரக் கொள்கைகளுக்கும் இது அத்தியவசியமானது என அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடம் வலியுறுத்தத்த தொடங்கியது. இதனைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியம் மற்றும் பல உதவி வழங்கும் நிறுவனங்கள் தமது உதவிகளை வழங்குவதற்கு முன்நிபந்தனையாக அரசுகள் நல்லாட்சியைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கட்டாயப்படுத்தத் தொடங்கின.

## 4.0 தேசிய அரசாங்கத்தில் நல்லாட்சியின் பிரயோகம்:

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நல்லாட்சியின் அடிப்படையில் அரசாங்கம் வழிநடத்தப்படுவதாகக் கூறப்படுகின்றது. நல்லாட்சியின் இன்றியமையாத பண்புகளாக பங்கேற்பும் இணக்கப்பாடும், நியாயத் தன்மையும் சட்டத்தின் ஆட்சியும், அனைத்து மக்களினதும் அபிலாசைகள், மனித உரிமையை உத்தரவாதப்படுத்தல், சமத்துவம், தேசத்தைக்

கட்டியெழுப்புதல் மற்றும் அரசியல் தலையீடுகள் குறைந்த மட்டத்திலான பொதுச்சேவை, போன்ற பண்புகள் காணப்படுகின்றன (Weiss. G. Thomas, 2000). இலங்கையில் தற்போது தேசிய அரசாங்கம் ஆட்சிபுரிகின்றது. இவ்வரசாங்கத்தில் மேற்குறித்த நல்லாட்சிப் பண்புகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பதே இங்கு பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது.

### 4.1 பங்கேற்பும் இணக்கப்பாடும்:

நடைமுறையில் உள்ள தேசிய அரசாங்கம் குடும்ப அரசியலை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாக சில அரசியல் தலைவர்கள் பரப்புரை செய்கின்றனர். ஆயினும், குடும்ப உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் செல்வாக்குச் செலுத்துவதினைக் காணக்கூடியதாகவுள்ளது (Kodikara, 2009). இது அடிமட்ட மக்களின் அரசியலில் பிரவேசத்திற்குத் தடையாக உள்ளது. அத்துடன் பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கான இடம் ஒதுக்கப்படுவது தொடர்பில் சட்டமியற்றுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர். அது உயர் குழாமினரையும், ஆணாதிக்கத்தையும் உடைய ஒரு நல்லாட்சி அரசாங்கம் செயற்படுவதையே அடையாளப்படுத்துகின்றது (தற்போது உள்ளூராட்சி 25வீதம் மற்றும் மாகாண சபைகள் 30 வீதம்). இது நல்லாட்சிப் பண்புகளான பங்கேற்பு மற்றும் இணக்கப்பாடு தொடர்பான நல்லாட்சிப் பண்புகளுடன் உடன்படுவதில்லை. தற்போது உள்ள பாராளுமன்றத்தில் 06 வீதம் மாத்திரம் பெண்கள் ஆகும் (Rameez. 2018)

### 4.2 நியாயத் தன்மையும் சட்டத்தின் ஆட்சியும்:

இத்தேசிய அரசாங்கத்தில் முன்னைய அரசாங்கத்தில் ஊழல் செய்தவர்கள் மற்றும் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களும் அங்கம் விகிக்கின்றனர். தவிர, ஊழல் செய்தவர்கள் என்று விமர்சிக்கப்பட்டவர்கள் தொடர்பில் குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், அது எந்தளவு தூரம் வெற்றிபெற்றுள்ளது என்பது மக்களின் எண்ணங்களில் வினாவாகியுள்ளது (Hariharan, 2016). மேற்குறித்த இரு விடயங்களும் நல்லாட்சிப் பண்புகளான நியாயத் தன்மை, சட்டத்தின் ஆட்சி ஆகிய நல்லாட்சிப் பண்புகள் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பதனை அறிய முடிகின்றது.

### 4.3 அனைத்து மக்களினதும் அபிலாசைகள்:

தோமஸ் ஜி வெயிஸ்இன் கருத்துப்படி நல்லாட்சி என்பது ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களின் அபிலாசைகளையும் கருத்திற் கொண்டு அரசாங்கம் செயற்படவேண்டும் எனக்

கூறியுள்ளார். இந்நிலையில் தேசிய அரசாங்கம் அனைத்து மக்களின் அபிலாசைகளையும் கருத்தில் எடுத்துச் செயற்படும் பொறிமுறையின் அடிப்படையில் செயற்படுகின்றதா? என்பது கவனத்தில் கொள்ளப்படத் தக்கதாகும். குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்விடம் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினை, அரசியற் கைதிகள் பிரச்சினை, வலிந்து காணமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, மீனவர்களின் பிரச்சினை, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் வீட்டுப் பிரச்சினை என்பன தேசிய அரசாங்கத்தில் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றுவதில் தோல்வியடைந்து வருகின்றது எனக்கூறலாம்.

### 4.4 மனித உரிமையை உத்தரவாதப்படுத்தல்:

நல்லாட்சியில் மனித உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். ஆயினும், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தற்போதும் இடம்பெறுகின்றன. அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் பாலியல் வன்புணர்வுகள் என்பன தினமும் அதிகரித்துக் கொண்டே செல்வதனைக் காணலாம். இவற்றினைத் தடுப்பதற்கு இன்னும் இத்தேசிய அரசாங்கத்தில் இறுக்கமான சட்டங்கள் கொண்டுவரப்படவில்லை.

### 4.5 சமத்துவம்:

சமத்துவம் என்பது நல்லாட்சி அரசாங்கத்தின் மிகமுக்கிய பண்பாகும். அரசியல், பொருளாதார சமூக விடயங்கள் அனைத்திலும் சகல இன மக்களும் சமமாக நோக்கப்படுதல் வேண்டும். இன, மத ரீதியாக எந்தவிதமான வேறுபாடுகளும் காட்டப்படக்கூடாது. எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்ற அடிப்படையில் சமசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் சராசரியாக 25000 – 30000 மக்கள் வாழும் பகுதிகளுக்கு ஒரு பிரதேச செயலகம் ஒன்று செயற்பட வேண்டும். இருப்பினும், மலையக மக்கள் செறிவாக வாழும் நுவரெலியா மாவட்டத்தில் 132000 பேருக்க ஒரு பிரதேச செயலகம் காணப்படுவதுடன், 2500 – 3000 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு (சாதாரணமாக 300 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் பிரிவு) காணப்படுவது பாராபட்சமான செயற்பாடாகும். பல்லின மக்கள் வாழும் இலங்கை போன்ற நாடுகளில் பெரும்பான்மையினோர் சிறுபான்மையினரை பலவகைகளிலும் அடக்க முற்படுவதனை அவதானிக்கலாம். எனவே, மேற்குறித்த நல்லாட்சிப் பண்புகளுடன் சிறுபான்மையினோர்

பாதுகாப்புத் தொடர்பிலும் நல்லாட்சிப் பண்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினை அவதானிக்க முடிகின்றது.

### 4.6 தேசத்தைக் கட்டியெழுப்புதல்:

தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இன்றும் பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இனங்களுக்கிடையே குரோத மனப்பான்மை தொடர்ந்த வண்ணமே உள்ளது. குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களிற்கு எதிராக இனக் குரோதத்தினை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் சில பெரும்பான்மை இனத்தினைச் சேர்ந்த மதம்சார் அமைப்புக்களினால் முன்னெடுக்கப்படுவதனைக் அவதானிக்கலாம்.

### 4.7 அரசியல் தலையீடுகள் குறைந்த மட்டத்தில் உள்ள பொதுச்சேவை:

அரசியல் தலையீடு அற்ற பொதுத்துறை நிர்வாகம் என்பதனை நோக்கின், அரசாங்க நிர்வாக ஒழுங்கமைப்புச் செயற்பாட்டில் இருக்க வேண்டிய நடுநிலைத் தன்மையும், தொழில்சார் தன்மையும் மறைந்து நிர்வாக அதிகாரிகள் பதவியிலுள்ள அரசியற் கட்சிகளுக்கும், அவற்றின் உறுப்பினர்களுக்கும் பக்கச் சார்பாகச் செயற்படுதலே அரசியல் தலையீடு உள்ள பொதுத்துறை நிர்வாகம் என்கிறோம். அரசியல் யாப்பில் 17ம் சீர்திருத்தத்தின் மூலம் மேற்குறித்த விடயத்தினை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சீர்திருத்தத்திற்கமைய உருவாக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையில் கூடுதலான கட்சிச் சார்பற்றவர்கள் இணைக்கப் பட்டிருந்தனர். மற்றும் பொதுச்சேவை ஆணைக்குழு பொதுத்துறை பணியாட்களினை நியமிப்பது தொடர்பில் கூடுதலான அதிகாரத்தினைப் பெற்றிருந்தது. ஆயினும், 19 ஆவது சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்புப் பேரவை, 17 ஆவது திருத்தத்தில் இருந்ததைப் போல் அரசியல் மயமாக்கப்படாமல் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், இது நிறைவேற்றப்படவில்லை. ஏனெனில், கூடுதலான அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவே உள்ளனர். இதன்வழி அரசியல் தலையீடு குறைந்த பொதுத்துறை நிர்வாகச் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்படுவதில் தடைகள் தோற்றம் பெற்றன. எனவே, நல்லாட்சியிலும் அரசியல் தலையீடுகள் அற்ற பொதுத்துறைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனக் கூறமுடியாது.

## 5.0 கண்டுபிடிப்புக்களும் ஆய்வின் முடிவுகளும்:

நல்லாட்சிப் பண்புகளின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள தேசிய அரசாங்கத்தினை ஆய்வு செய்கின்றபோது, தேசிய அரசாங்கம் நல்லாட்சி அடிப்படையில் ஆட்சி செய்கின்றதா? என்ற ஆய்வுப் பிரச்சினைக்கு விடை கூறப்பட்டுள்ளது. கடந்தகால ஆட்சியுடன் ஒப்பிடும் போது நல்லாட்சியில் சில பண்புகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக ஊடக சுதந்திரம், சுதந்திரமான தேர்தல், இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகள் முன்னெடுப்பு, கருத்து வெளியீட்டுச் சுதந்திரம், தகவலறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டமை மற்றும் காணமல் போனோரைக் கண்டறிவதற்கான காரியாலயம் திறக்கப்பட்டுள்ளமை போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்பதன் மூலம் நல்லாட்சிக்கான அனுபவங்கள் இலங்கையில் பெறப்பட்டுள்ளன.

30 வருடங்களிற்கு மேலாக உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற ஒரு நாட்டில், இனக்குரோதங்கள், யுத்தத்தின் வெற்றி தோல்வியினால் ஏற்பட்ட வலி, வடு என்பவற்றினை உடனடியாகவே நல்லாட்சி என்கின்ற பதத்திற்கு ஊடாகச் சீர்செய்தல் என்பது இயலாத காரியம். மட்டுமன்றி யுத்தத்தின் விளைவாக தோன்றியுள்ள அரசியல், சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறுகிய காலத்தினுள்ளே சரிசெய்வது என்பதும், இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு நாட்டின் இயலுமைக்கு அப்பாற்றபட்ட விடயம். எவ்வாறாயினும், இலங்கையில் உள்ள சகல மக்களையும் ஒன்றிணைத்து நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இத்தேசிய அரசாங்கத்திடம் அதிகமாகக் காணப்படுகின்றது. அதற்கு, கடந்த காலத்தில் மக்கள் அனுபவித்த அடக்குமுறையும் காரணம் எனலாம். எவ்வாறாயினும், சமகால அரசியல் தலைமைகள் நடைமுறையில் உள்ள நல்லாட்சி தொடர்பில் மிகைப்பட்ட தோற்றத்தையே காட்டுகின்றனர். அத்துடன், நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகின்ற சில நல்லாட்சிப் பண்புகள்கூட சர்வதேச அழுத்தத்தின் மத்தியிலேயே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இந்நிலைமை தேசிய அரசாங்கம் தனது நல்லாட்சி நோக்கிய பயணத்தினை முடிவுக்குக் கொண்டுவர இன்னும் அதிக காலம் பயணிக்க வேண்டியுள்ளது எனக் கூறலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


Aliu Ylber, (2018), *Comparison of Plato's Political Philosophy with Aristotle's political philosophy,* Faculty of Public Administration, AAB College, Republic of Kosovo, URL Available on: https://www.researchgate.net/publication/324595936_ Comparison_of _Plato's_Political_ Philosophy_ with_Aristotle's_Political_Philosophy [Accessed 20th May 2017]

Dumitrescu, C.A. (2010), *The Concept of Good Governance in Aristotle's view,* Part II Dimitrie Cantemir Christian University, URL Available on: http://cogito.ucdc.ro/nr_3_en/1%20-%20THE%20CONCEPT%20OF%20GOOD%20GOVERNANCE%20IN%20_eng.pdf [Accessed 20th June 2017]

Ghisad Anushree, (2016) *Sri Lanka: One year of National Unity Government An Assessment,* Research Journal of Vivekananda International Foundation, Colombo. URL Available on: http://www.vifindia.org /article/ 2016/september/02/sri-lanka-one-year-of-national-unity-government-an-assessment [Accessed 10th July 2017]

Gisselquist M. Rachel (2012), *Good Governance as a Concept, and why this policy*, United Nations University, Available from: https://www.researchgate.net/publication/ 239810900_Good_ Governance_as_a_Concept_and_Why_This_Matters_for_Development_Policy [Accessed 15th July 2017]

Hariharan, R. (2016), *Sri Lanka: Is It good bye to "Good Governance*", URL Available on: https://www.colombotelegraph.com/index.php/sri-lanka-is-it-good-bye-to-good-governance/ [Accessed 21st may 2017]

Kelegama Saman (2016), *The Sri Lankan government's honeymoon period is over*. Research Journal of East Asia Forum, URL Available on: http://www.eastasiaforum.org/ 2016/01/01/ the-sri-lankan-governments-honeymoon-period-is-over/ [Accessed 05th July 2017]

Kodikara, C. (2009), *The Struggle for Equal Political Representation for woman in Sri Lanka* Report for the Child development and Woman's Empowerment and the United Nation Development Programme, URL Available on: http://www.lk.undp.org/content/dam/srilanka/ docs/governance/ WPE%20FINAL%20PDF.pdf [Accessed 10th June 2017]

Maldonado, N. (2010) *The World Bank's evolving concept of Good Governance and its impact on Human Rights*, University of Bonn Law School, Germany, URL Available on: http://www.who.int/medicines/areas/policy/goodgovernance/WHO-GGMframework.pdf [Accessed 16th June 2017]

Nizam Ifham (2017), *Will Good Governance Deliver in 2017*. Research Article of the Sunday Leader. URL Available on: http://www.thesundayleader.lk/2017/01/01/will-good-governance-deliver-in-2017/ [Accessed 01st July 2017].

Rameez A. (2018), *Political participation of Woman in Local Governance: A Case study of selected Local Governament Bodies in East Sri Lanka*, URL Available on: https://www.researchgate.net/publication/324199629_Political_Participation_of_Women_in_Local_Governance_A_Case_Study_of_Selected_Local_Government_Bodies_in_Eastern_Sri_Lanka [Accessed 10th June 2018]

The Asian Foundation (2016), *Sri Lanka Strategic Assignment 2016*,. Research Report. URL Available on: http://asiafoundation.org/wp-content/uploads/2016/05/Sri-Lanka-Strategic-Assessment-2016.pdf [Accessed 05th July 2017].

The world Bank Group (1999), *Good Governance: An Overview*, International fund for Agricultural Development, Executive Board, 67th Session, Rome, URL Available on: https://www.ipa.government.bg/sites/default/files/pregled-dobro_upravlenie.pdf [Accessed 17th July 2017]

UNDP (1997), *Governance for sustainable Human Development*, United Nation Development Programme, URL Available on:https://www.gdrc.org/u-gov/g-attributes.html [Accessed 30th July 2017]

Weiss. G. Thomas, (2000) *Governance, good governance and global governance: conceptual and actual challenges*, Third world quarterly Journal, URL Available on: https://www.tandfonline.com/doi/abs/10.1080/713701075 [Accessed 20th July 2017]

அலுத்பட்டபெந்திகே, து. (2000), *நல்லாட்சி*, பெப்ரல் அமைப்பு, கொழும்பு.

புஞ்சிஹேவா, எஸ். ஜீ. (2003), *நல்லாட்சி – கட்டுரைத் தொகுப்பு*, பெப்ரல் அமைப்பு, கொழும்பு.